முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 205/17

தேதி : 15-03-2024

(வா.சா.1) – ராமசுப்ரமணி (பி.வா.சா.1)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நான் நிரந்தரமாக பண்ணைக்காட்டில் வசிக்கிறேன். நான் 2014 ம்ஆண்டு என்னுடைய சொத்தை கிரையம் வாங்கினேன். வாதியின் சொத்து அவருடைய பூர்வீக சொத்து என்றால் சரிதான். வாதி பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த பாதை வத்தலக்குண்டு மெயில் ரோட்டிலிருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்கிறது. அந்த பாதை ஆரம்பிக்கும் இடத்தில் இடது கைப்பக்கம் உள்ள இடம் சுப்பன் செட்டியார் இடம் என்றால் சரிதான். அதற்கு வலது கைப்பக்கம் உள்ள சொத்து டிஎஸ்.கே.எஸ் கோபாலன் சொத்து என்றால் சரியல்ல, அது கேபிஎன் சுந்தர்ராஜன் என்பவர் சொத்து ஆகும்.தாவா பாதை ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து வாதியின் இடம் வரையில் ஜீப் செல்வதற்கு கற்கள் பதிக்கப்ப்ட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 வரைபடம் புலஎண். 1263 க்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் புல்எண. 1267 என்றால் சரிதான். மேற்படி 1267 சொத்து புலஎண்.1267/1, 1267/2, மற்றும் 1267/3 என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் புலஎண். 1267/1. 1267/2, 1267/3 ன் புல வரைபடத்தின் ஆன்லைன் நகல் என்றால்

சரிதான். அவை வா.சா.ஆ.22 முதல் 24 ஆக குறியீடு செய்யப்பட்டது. ஆகும். அந்த பாதை ஆரம்பிக்கும் இடம் நான் குடியிருக்கும் பண்ணைக்காட்டில் இருந்து சாலை வழியாக வந்தால் சுமார் 5 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல, சுமார் 3.5 கி.மீ தான் இருக்கும். தவா பாதையில் வாதியால் மட்டுமதான் ஜுப்பில் செல்ல முடியும் என்றால் சரிதான். தாவா பாதையில் வாதி பிரச்சனை செய்து ஆக்கிரமிப்பு செய்துதான் கற்கள் பதித்துள்ளார். தாவா பாதையை ஆரம்பித்திலிருந்தே வாதி மற்றும் அவரது குடும்பத்தார் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் வாதிகள் உட்பட எல்லோரும் பயன்படுத்தி வருகிறோம். தாவா பாதை பொதுப்பாதை என்று நான் சொல்கிறேன். சேதுபதி செட்டியார் என்பவர் அந்த பாதையை பொது பயன்பாட்டிற்காக தானமாக கொடுத்துள்ளார். அவ்வாறு பொது பயன்பாட்டிற்காக அவர் தானமாக கொடுத்தது சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா பாதை வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பண்ணைக்காட்டிலிருந்து வாழைகிரிக்கு போவதற்கு பல தோட்டங்கள் வழியாக ஒரு பாதை செல்கிறது என்றால் சரிதான் . தாவா பாதைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா பாதையை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். ஆணையர் அறிக்கையில் என்னடைய தோட்டத்திற்கு மேறப்டி வாழைகிரி பாதையிலிருநது பிரிநதது ஒரு பாதை செல்கிறது என்று சொல்லியுள்ளார் என்றால் தவறு. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளனா என்றால் வழக்கு நடந்து கொண்டிருப்பதால் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை. நான் எனக்கு பாத்தியபட்ட சொத்தை விற்கவில்லை. நான் அதனை விற்றுவிட்டதாக சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியமாக 2 இடங்கள் இருந்தது. அதில் ஒரு இடத்தை

விற்றுள்ளேன். தாவா பாதை அரசாங்க பொதுப்பாதை என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். தாவா பாதை வாதிக்கு பாத்தியப்பபட்ட பட்டா இடத்தில் உள்ள பாதை யை நான் அடாவடியாக அது பொதுப்பாதை என்று கூறி வாதிக்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பாதையை வாதியை தவிர வேறு யாரும் பயன்படுத்தவில்லை என்றும் என்னுடைய சொத்தும் மற்றும் பிற நபர்களின் சொத்திற்கு தனியாக வேறு பாதை உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.19 10:02:57 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.